| | | |
|---|---|---|
| **O.S No.** | : | **157/2017** |
| **DATE** | : | **22.01.2026** |
| **பெயர்** | : | **சபாபதி** |
| **தந்தை பெயர்** | : | **Raju** |

**வாதி தரப்பு பி. வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**நீதிமன்ற குறிப்பு –** சாட்சியின் வயோதிகம் மற்றும் உடல்நிலை காரணமாக சாட்சி இருக்கையில் அமர வைக்கப்பட்டு சாட்சியம் பதியம் செய்யப்படுகிறது.

8. மூலஸ்தானம், தெய்வ நாயகர் மண்டபம், மாவடி மற்றும் சோமாஸ்கந்தர் ஆகியவை அனைத்தும் சேர்ந்து ஒரு முறை என்றால் சரிதான். 1917 வழக்கில் நான்கில் ஒரு அம்சம் என்பது இதை தான் குறிக்கிறது என்றால் சரிதான். கோவிலின் அருகே சுப்பிரமணியர் என்பவர் வீடு கட்டியிருந்து தகராறு ஏற்பட்ட விவரம் எனக்கு தெரியும். மேற்படி சுப்பிரமணியர் என்பவர் சாளுவ சுப்புராய நாயகர் மகள் வழி பேரன் என்றால் சரிதான். அவர் சாளுவ மிராஸ் செய்திருக்கிறாரா என்றால் இல்லை. சாளுவ சுப்புராய நாயகர் என்பவர் சாளுவ மிராஸ்தாரர் என்றால் சரிதான். சாளுவ சுப்புராய நாயகர் எனக்கும், வாதிக்கும் பங்காளிகள் என்றால் சரிதான். சாளுவ சுப்புராய நாயகர் முறையை நானோ, எனது குடும்பத்தினரோ யாரும் செய்தது இல்லை என்றால் சரிதான். எனது தந்தையார் மேற்படி சாளுவ சுப்புராய நாயகர் முறையை செய்துள்ளரா என்றால் அவர் முறை பார்த்தார், யாருடைய முறையை பார்த்தார் என்று தெரியாது. எனது தந்தையார் முறை பார்த்தற்கு எழுத்து பூர்வமான ஆதாரம் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது.

9. பட்டம்மாள் என்பவர் எனது பங்காளி என்று சொன்னால் எனக்கு தெரியாது. தென்னேரி சுந்தரேச குருக்களுக்கு எதிராக வாதி, எனது அண்ணன் நாகசாமி நாயகர் மற்றும் எனது தந்தை ஆகியோர்கள் வழக்கு நடத்தினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும். சுந்தரேச குருக்களின் மகன்கள் தற்போது சாளுவ மிராஸ் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். எனது பெரியப்பா சோமு நாயகர் தவிர்த்து மற்றொரு சோம சுந்தர நாயகர் இருந்தார் என்ற விவரத்தை ஆவணங்களை பார்த்து தெரிந்து கொண்டேன். மேற்படி சோம சுந்தர நாயகருக்கும் ஸ்தானிகம் மிராசு உண்டு என்றால் சரிதான். சோம சுந்தர நாயகரின் 1ன் கீழ் 10 முறையை எனது தந்தையாரோ, எனது

குடும்பமோ செய்ததா என்றால் எனக்கு தெரியாது. சோம சுந்தர நாயகர் அவரது முறையை வாதிக்கு தானம் எழுதி கொடுத்ததாக பத்திரம் உள்ளது அந்த பத்திரம் சரியா என்று எனக்கு தெரியாது. அந்த தான பத்திரத்தை நான் பார்த்துள்ளேன். எனது குடும்பத்தில் மூத்தவர்களிடம் மேற்படி முறை பற்றி விசாரித்தேனா என்றால் தற்போது நான் தான் மூத்தவர்.

10. தாது நாயகர் 1ன் கீழ் 4 முறை செய்தார் என்று நான் சொல்கிறேன் அது எந்த ஆண்டு ஆரம்பித்தது என்றால் எனக்கு தெரியாது. எப்போது அந்த முறை ஆரம்பிக்கப்பட்டது என்பதை காட்டுவதற்கான எழுத்து பூர்வமான ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. எனது சொந்த பெரியப்ப சோமு நாயகர் எங்கள் குடும்பத்திற்கு உள்ள முறை பற்றி ஏதாவது பத்திரம் எழுதி வைத்துள்ளரா என்றால் இல்லை. எனது சொந்த பெரியப்பாவிற்கு வாரிசுகள் கிடையாது என்றால் சரிதான். அவரது முறையை பிரித்துக் கொள்ளும்போது எவ்வாறு பிரித்துக் கொள்ளலாம் என்ற எழுத்து பூர்வமான ஆதாரம் உள்ளதா என்றால் சாட்சி பதில் எதுவும் தெரிவிக்கவில்லை. சாளுவ சுப்புராய நாயகர், சாளுவ சோம சுந்தர நாயகர் ஆகியோர்களின் முறையை சேர்த்து வாதிக்கு 9ன் கீழ் 10 முறை உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

11. நமண்டி சுப்பிரமணிய நாயகர் என்பவர் எங்களது மூதாதையர்களில் ஒருவர் இருந்தார் என்றால் ஆவணங்களில் அவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தது. நமண்டி சுப்பிரமணிய நாயகரும் ஆவணங்களின் அடிப்படையில் ஒரு ஸ்தானிகம் மிராசு. அவரது 1ன் கீழ் 10 முறைய நானோ எனது மூதாதையரோ செய்தது கிடையாது என்று சொன்னால் எனக்கு தெரியாது. நமண்டி சுப்பிரமணிய நாயகரிடம் இருந்து எனக்கோ, எனது மூதாதையருக்கோ எழுத்து பூர்வமாக எழுதி கொடுத்தாரா என்றால் இல்லை. மேற்படி முறைகள் அனைத்தும் ஆவணங்களின் அடிப்படையில் வாதிக்கு சேர்ந்தது என்று சொன்னால் சரியல்ல. கோவிலில் இருந்து மிராசு முறை கிடையாது என்று ஏதாவது கடிதம் கொடுத்துள்ளர்களா என்றால் இல்லை.

12. என்னுடைய அண்ணன் நாகசாமி நாயகரின் பேரன்கள் தற்போது வரை கோவிலில் மிராசுதார் என்ற அடிப்படையில் முறை செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். முந்தைய வழக்குகளின் அடிப்படையிலும், எனது தந்தையார் எழுதி கொடுத்த

ஆவணத்தின் அடிப்படையிலும் எங்களது குடும்பத்திற்கு 10ல் 1 முறை தான் உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.**

**கற்றறிந்த 9ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

FANNY RAJAN

Principal District Munsif, Kancheepuram

Digitally signed by FANNY RAJAN